1971 ஜூலை 30]

புத்தாம்பூர் குளம்

* 568 வின— திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புத்தாம்பூர் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்க உத்திரவிடப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இது அரசு ஆய்வில் உள்ளதனல் எப்பொழுது உத்திர விடப்படும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

சாத்தனூர் அணையிலிருந்து கால்வாய் வெட்டுதல்

* 569 வின—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து பெண்ணையாற்றுக்குத் தென்புறம் வாய்க்கால் வெட்டி பாசன வசதி செய்வதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) சாத்தனூர் அணையின் (pick up anicut) வலது புறக்கால்வாய்த் திட்டத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம் தாலூகாவிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி தாலூகாவிலும் சுமார் 10,000 ஏக்கரா நிலங்கள் சாகுபடியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தின் மதிப்பு சுமார் ரூ. 90.00 லட்சம்.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவரவர்களே, சாத்தனூர் டாமை வெளிநாட்டினரைக் கவரக் கூடியவகையில் மேலும் அழகு படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கேள்வி மாண்புமிகு பிற்பட்ட நலத்துறை அமைச்சருக்குப் போடலாம்.

திரு. ந. நாச்சியப்பன்: தலைவரவர்களே, இந்த வாய்க்கால் திட்டத்தை அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் நீண்ட நாட்களாக அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அமைச்சர் ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொல்லியது போல், பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சாத்தனூர் அணைத் தண்ணீரை, நந்தன் கால்வாய் முடிந்தவுடன் அதில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போடவும்.

பாலாற்றுப்படுகையிலுள்ள கிணறுகள்.

* 570 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

பாலாற்றுப் படுகையில் கிணறுகளில் மின்விசை அமைத்துத் தண்ணீர் இறைக்கத் தடை விதிக்கும் சட்டத்தினை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பாலாற்றுப் படுகையிலே மின்சார இயந்திரத்தை அமைத்துத் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று விதி முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள். சில நேரங்களில் பாலாற்று படுகை 15 மைலுக்கு இடையே கூட.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகப் போடுங் கள்.

திரு. கே. எ. வகாப்: கேள்வி தான். மின்சார இயந்திரத்தை பாலாற்றுப் படுகையில் போடுவதற்கு அனுமதி அளிப்பது இல்லை. இதற்குக் காரணம் என்ன என்று ஆராயும்போது, அந்த ஆற்றில் தண்ணிர் வருவது இல்லை என்பது தான். ஆகவே, பாலாற்றில் தண்ணீர் வரவழைப்பதற்காக, இந்தக் காவிரிப் பிரச்னையோடு, இந்தப் பாலாற்றுப் பிரச்னையையும் மைசூர் அரசோடு கலந்து பேசி தீர்ப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு நேரத்தில் ஒரு கேள்வி போடலாம். இரண்டு மூன்று கேள்விகள் போட்டால் பதில் சொல்ல இயலாது. இந்தப் பாலாற்றுப் படுகையிலே மின்சார இயந்திரத்தைப் பொருத்தி தண்ணீர் எடுக்கக் கூடாது என்பது விதி முறையாகும். இன்டிஸ்கிரிமினேட்டாக கிணறு வெட்டுவதால், கிணறு ஒன்றுக்கும் மற்றென்றுக்கும் இடையில் இவ்வளவு இடை வெளி இருக்கவேண்டுமென்று விதிமுறைகள் அமைக்கப்பட்டிருக் கின்றன. இந்த விதிமுறைகள் விவசாயிகள் நலன் கருதித்தான் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பாலாற்றுப் பிரச்னைக்கும், காவிரி நீர் பிரச்னைக்கும் தொடர்பு படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The Hon Minister's reply is very exhaustive. I am not allowing any more supplementaries. பதில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறுர்கள்.